ஊடக அறிவித்தல் இல. - 96

# தேர்தல் ஆணைக்குழு

பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

## 2020 பாராளுமன்றத் தேர்தலுக்காகப் போட்டியிட்ட வேட்பாளர்கள் அனைவருக்கும் விடுக்கப்படுகின்ற அறிவித்தல்

1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தெரிந்தனுப்பப்படுகின்ற வேட்பாளர், தனது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்தலை, அவர் பெயர்குறித்து நியமனம்செய்யப்பட்ட தினத்தன்று அல்லது பாராளுமன்றத்தில் அமரவதற்கு அல்லது பாராளுமன்றத்தில் வாக்களிப்பதற்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கான வேட்பாளரொருவராகப் போட்டியிட்ட மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாகவோ அல்லது நேரில் வந்தோ தேர்தல் ஆணைக்குழுவில் கையளித்தல் வேண்டும்.

***ஆகையால், பெயர்குறித்த நியமன காலப்பகுதியிலோ அல்லது அதற்குப் பின்னரோ, வாக்களிப்புத் திகதிக்கு முன்னர் தமது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்தல்களைக் கையளிக்க முடியாத நிலை ஏற்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது தெரிந்தனுப்பப்பட்ட அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும், தமது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்தல்களை உடனடியாக அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஊடாகவோ அல்லது நேரில் வந்தோ தேர்தல் ஆணைக்குழுவில் கையளிக்க வேண்டுமென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.***

அதேபோன்று, தெரிந்தனுப்பப்படாத வேட்பாளர்கள் தமது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்தல்களை இதுவரை கையளித்திருக்கவில்லையெனில், அச்சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்தல்கள், தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் தெரிந்தனுப்பப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரகடனம் செய்யப்பட்ட 2020 ஆகஸ்ட் மாதம் 07 ஆந் திகதியிலிருந்து ஒரு மாத காலம் முடிவடைவதற்குள் அதாவது, 2020 செப்டம்பர் மாதம் 06 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாகவோ அல்லது நேரில் வந்தோ தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டுமென்பதும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு தமது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்தல்களை வழங்காதிருக்கின்ற வேட்பாளர்களை, 1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற தவறை இழைப்பவர்களாகக் கருதி, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அவர்கள் பற்றி அறிக்கையிடப்படுமென்பதும் மேலும் அறிவிக்கப்படுகின்றது.

அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாகவோ அல்லது நேரில் வந்தோ தேர்தல் ஆணைக்குழுவில் கையளிக்கப்படுகின்ற இந்த சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்தல்களை, அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக பிரசையெவருக்கும் கையேற்க முடியுமென்றபோதிலும், அவ்வெளிப்படுத்தல்களை நீதிமன்றக் கருமங்களுக்கு அன்றேல் நீதிமன்றமொன்றில் சமர்ப்பித்தல் தவிர்ந்த வேறெந்தக் கருமங்களுக்கும் பயன்படுத்த சட்ட ஏற்பாடுகள் இல்லையென்பதும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், அனைத்துப பாராளுமன்ற உறுப்பினர்களும் அடங்கலான முன்னணி அரசியல்வாதிகள், ஆர்வமுள்ள தரப்பினர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு தமது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்தல்களை தமது இணையத்தளத்தின் ஊடாக பகிரங்கப்படுத்துவார்களாயின், அது சிறந்ததோர் ஆட்சிமுறை அமைவதற்கு உறுதுணையாக அமையுமென்பது தேர்தல் ஆணைக்குழுவின் எண்ணமாகும்.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை
இராஜகிரிய

2020.08.12